**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No. 220/2019**

**2024** ம் வருடம் மார்ச் திங்கள் 04 நாள் வாதி தரப்பில் 1 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திரு.முருகேசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : ராமநாதன் கிராமம்:

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. 3 ம் பிரதிவாதி என்னுடைய அண்ணன் மகன் என்றால் சரிதான். அவர் ஏற்கனவே சாயல்குடியில் ஜுனியஸ் கேட்ஜட்ஜ் என்ற பெயரில் கம்ப்யூட்டர் சேல்ஸ் மற்றும் சர்வீஸ் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். அந்த வியாபாரத்தை விரிவுபடுத்த நிதி உதவி கேட்டு 1,2 பிரதிவாதிகளை நாடினார்கள் என்றால் சரிதான். அதற்கு அவர் பெயரில் சொத்து இல்லாததால் சொத்து இருக்கின்ற நபரை கியாரண்டராக காட்டுவதற்கு என்னிடம் கேட்டார் என்றால் சரிதான்.

2. அதன் அடிப்படையில் 19.09.2018 ல் எனக்கும் எனது மனைவிக்கும் பாத்தியமான 2 லக்க சொத்தினை 1,2 பிரதிவாதிகளுக்கு பதிவு அடமானம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக 1,2 பிரதிவாதிகள் அலுவலகத்திற்கு சென்று கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. அவர்கள் தான் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். ஸ்ரீராம் பைனான்சில் வேலை பார்க்கும் மேனேஜர் மற்றும் அதில் வேலை பார்க்கும் வேறு ஒருவரும் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

3. அவர்கள் வந்து கையெழுத்து கேட்ட இடத்தில் நானும் எனது மகனும் கையெழுத்து போட்டு கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் ஜெராக்ஸ் ஆவணத்தில் அசலில் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதில் நான் போட்டோ ஒட்டவில்லை. என் மகன் பெயர் சுந்தர்ராஜன். அவர் எம்.பி.ஏ வரை படித்துள்ளார்.

4. பைனான்ஸ் நிறுவனத்தினர் என் வீட்டிற்கு வந்ததாக சொல்லப்படும் தினத்தில் என் மகனும் அங்கு இருந்தார். நானும், என் மகன், என் மனைவியும் சேர்ந்து

தான் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். என்னுடைய மகன் அதில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று படித்துப்பார்த்து எங்களிடம் சொல்லிதான் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. அவர்கள் எங்களிடம் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டார்கள்.

5. என்னுடைய மகனும், 3ம் பிரதிவாதியும் தொழில் செய்தவற்காக பார்ட்டனராக சேர்ந்து பணம் கேட்டதால் கையெழுத்து போட்டேன். அவ்வாறு என் மகனும் என் அண்ணன் மகனும் என்னிடம் சொன்னார்கள். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 1,2 பிரதிவாதிகள் எந்த வகையில் என்னை ஏமாற்றினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் எனக்கு பணம் தரவில்லை.

6. யார் கடன் கேட்டு விண்ணபித்திள்ளார்களோ அவர்களுக்கு தான் 1,2 பிரதிவாதிகள் பணம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் நான் கேரண்டார் அடிப்படையில் கையெழுத்து போட்டுள்ளதால் 1,2 பிரதிவாதிகள் எனக்கு பணம் கொடுக்க வேண்டியதில்லை என்றாலும் சரியல்ல. 3ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகளிடம் பணம் பெற்றுக்கொண்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் 1,2 பிரதிவாதிகள் என்னிடம் பணம் செலுத்த கேட்டு தான் எனக்கு தெரியும்.

7. 1,2 பிரதிவாதிகள் ஆர்ப்பிட்ரேசன் வழக்கு தாக்கல் செய்ய போவதாக எனக்கு அறிவிப்பு அனுப்பிய பின்னர் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே தாக்கல் செய்து விட்டேன். 1,2 பிரதிவாதிகள் இவ்வளவு தொகை செலுத்தவில்லை என்றும் அதனால் என்னுடைய சொத்தை ஜப்தி செய்ய போவதாகவும், சொன்ன பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் அடமானத்தொகை ரூ.8,00,000/-த்திற்கான தவணை தொகைகளை 3ம் பிரதிவாதி செலுத்தவில்லை என்று அதனால் கேரண்டராக நானும் 2ம் வாதி எழுதிக்கொடுத்த சொத்தை ஜப்தி செய்ய போவதாக சொன்ன பிறகு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8. 1,2 பிரதிவாதிகள் அலுவலகத்தில் 3ம் பிரதிவாதியுடன் சேர்ந்து சமரச உடன்படிக்கை செய்து நானும் என்னுடைய மனைவியும் மகனும் கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் அந்த நடவடிக்கையில் இருந்து தப்பிப்பதற்காக இந்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தை ஜப்தி செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்திலிருந்து நோட்டீஸ் அனுப்பியிருந்தார்கள் நான் நீதிமன்றத்திற்கு

சென்று வந்தேன். அந்த வழக்கு எண் எனக்கு தெரியாது.

9. அந்த வழக்கில் நானும் என்னுடைய 3ம் பிரதிவாதியும் வழக்கறிஞர் மூலமாக ஆஜராகியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் வழக்கறிஞரை வைத்துள்ளேன். இராமநாதபுரம் நீதிமன்றத்தில் கிருஷ்ணகுமார் என்ற வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார். அவர் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. நானும், 3ம் பிரதிவாதியும் இராமநாதபுரத்தில் அஜய்குமார் என்ற வழக்கறிஞரை வைத்து தான் வழக்காடியுள்ளோம் என்றால் சரியல்ல.

10. அந்த வழக்கில் என்னுடைய சொத்தை சேல்ஸ் பேப்பர் எழுதிக்கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ள நிலையில் தற்சமயம் வேறு ஒரு வழக்கறிஞரை வைத்து ஆஜராகியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்சமயம் கிருஷ்ணகுமார் என்ற வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு 3ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகளிடம் வாங்கிய கடன் பற்றிய விவரங்கள் தெரியும் என்றாலும் அதை ஏமாற்றும் விதமாக 3 ம் பிரதிவாதியுடன் கூட்டாக சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னை ஏமாற்றி விட்டார்கள் என்பதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை, ஊர் பெரியவர்களை வைத்து பேசியுள்ளோம். அப்போது 3ம் பிரதிவாதி தவணையை கட்டிவிடவேண்டும் என்று சொன்னார்கள். 3 ம் பிரதிவாதி என்னை ஏமாற்றியிருந்தால் நான் அவருக்கு எதிராக தனிப்பட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியுடன் சேர்ந்து 1,2 பிரதிவாதிகள் கொடுத்த கடனை ஏமாற்றும் விதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. 1,2 பிரதிவாதிகளை ஏமாற்றும் விதமாகத்தான் நிறைவேற்று மனுவில் நானும் 3ம் பிரதிவாதியும் ஒரே வழக்கறிஞரை வைத்து எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி என்னை ஏமாற்றி இருந்தார் அவருடன் ஒன்றாக சேர்ந்து நிறைவேற்று மனுவில் ஒரே வழக்கறிஞரை வைத்திருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகள் அலுவலகத்தில் வாங்கிய கடனை சரியாக செலுத்ததால் சமரச உடன்படிக்கையின் அடிப்படையில் ஆர்ப்பிட்ரேசன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் நிறைவேற்று நடவடிக்கை நிலுவையில் உள்ள நிலையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

13. நான் வழக்குரையில் சொல்லியுள்ளவாறு வழக்கு மூலம் நடைபெறவில்லை என்றாலும், 1,2 பிரதிவாதிகளை ஏமாற்றும் வகையில் வழக்கு மூலம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளிடம் நானும், எனது மகன், மனைவி, 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சமரச உடன்படிக்கையின் அடிப்படையில் கடனை 3ம பிரதிவாதிக்கு முழுமையாக செலுத்தவில்லை என்றால் என்னுடைய சொத்து சமரச உடன்படிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு ஜப்தி செய்ய நேரிடும் என்பதால் அதிலிருந்து தப்பிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.